Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.III. TIRUPATTUR**

Case No. **CC.NO. 75/2021**

**DEPOSITION OF COMPLAINANT SIDE EVIDENCE No. 5 Page.No.**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | திரு. அருண்குமார் | **தொழில்** | காவல் ஆய்வாளர் |
| **த/க பெயர்** | திரு. பச்சையப்பன் | **கிராமம்/ஊர்** | தெள்ளார் |
| **வயது** | 54 | **மாவட்டம்** | திருவண்ணாமலை |

| | |
|---|---|
| எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச 317/ பா.நா.சு.ச 355 பிரிவு– ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது | 1 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 09th day of June 2026

**சாட்சி காணொலி வாயிலாக ஆஜர். சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**முதல் விசாரணை.-**

நான் தற்போது திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி உட்கோட்டம்,தெள்ளார் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 2021 ம் வருடம் நான் நாட்றம்பள்ளி காவல் ஆய்வாளராக பணியாற்றிய போது, சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு. ராஜா அவர்கள், அ.சா.1 னிடம் புகாரை பெற்று 15.01.2021 அன்று மாலை 19.00 மணியளவில் நாட்றம்பள்ளி காவல் நிலைய குற்ற எண். 10/2021 , பிரிவுகள் 279, 304(A) IPC கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார், **( அந்த முதல் தகவல் அறிக்கை என்னால் அ.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் மேல் விசாரணைக்காக வழக்கு கோப்பை என் வசம் ஒப்படைத்தார். வழக்கினை மேல் விசாரணைக்காக எடுத்துக்கொண்ட நான், கடந்த 16.01.2021 அன்று காலை 06.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள், குப்புசாமி மற்றும் செல்வம் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை **பார்வையிட்டு பார்வைமகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். (அந்த பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அ.சா.ஆ.3,4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர், அன்றைய தினமே வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு சென்று காலை 08.00 மணி முதல் 09.30 மணி வரை வழக்கு விபத்தில் இறந்த கவுண்டப்ப மந்திரி த/பெ. சென்றாய மந்திரி என்பவரின் பிரேதத்தை பார்வையிட்டு பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை அறிக்கை தயார்

செய்தேன். (**அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்பு இறந்தவரின் பிரேதத்தை வேண்டுகோள் கடிதத்துடன் பெண் காவலர் 1658– திருமதி. பிரியங்கா என்பவர் மூலம் பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தேன். பின்பு வழக்கு விபத்தில் ஈடுபட்ட வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளரிடம் ஆய்விற்கு அனுப்பி வைத்தேன். பின்பு 20.01.2021 அன்று காலை 10.00 மணிக்கு இவ்வழக்கின் எதிரியை காரணம் கூறி கைது செய்து தக்க நிலைய பிணையில் விடுவித்தேன். பின்பு இறந்தவரின் பிரேதத்தை பரிசோதனை செய்த மருத்துவர் திரு. நசீர் பார்சானா அவர்களை விசாரணை செய்து பிரேத பரிசோதனை அறிக்கையும், வாக்குமூலமும் பெற்றேன். **பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேலும், விபத்தை ஏற்படுத்திய TN 20 CS 2689 என்ற வாகனத்தை பரிசோதனை செய்த மோட்டார் வாகன ஆய்வாளரை விசாரணை செய்து வாக்குமூலமும், ஆய்வறிக்கையும் பெற்றேன். **(அந்த மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்பு எனது விசாரணையை முடித்து எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 279,304 (A) ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –</u>**

சம்பவயிடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 6 கி.மீ. இருக்கும். சம்பவம் சாலையின் மையப்பகுதியில் நடைபெற்றது என்றால் சரிதான். சம்பவம் நடந்தது தேசிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். நான் சம்பவயிடம் சென்று பார்த்தபோது வாகனங்கள் இருந்ததா என்றால் கார் மட்டும் இருந்தது. மாதிரி வரைபடத்தில் மேற்படி வாகனத்தை காண்பித்துள்ளேனா என்றால் இல்லை. இறப்புற்ற நபர் சாலை விதிகளை மதிக்காமல் சாலையின் நடுவே சென்றதால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றாலும், எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றாலும், இவ்வழக்கில் நான் சம்பவ இடம் செல்லாமல், சாட்சிகளை சரிவர விசாரிக்காமல், அ.சா.1 கொடுத்த பொய்யான புகாரை பெற்று, இவ்வழக்கின் ஆவணங்களை காவல் நிலையத்திலேயே வைத்து, தயாரித்து, எதிரி மீது தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை –</u>** இல்லை

| |
|---|
| Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.<br><br>Signature of Witness      Judicial Magistrate No.III (FAC)<br>Tirupathur. |